விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 158 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (26.05.2023). தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வவுனியாவில் வெடிகுண்டு புரளி



### பாடசாலை முன்பாக பலத்த பாதுகாப்பு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதிக்குள் மாணவர்களை இலக்கு வைத்து குண்டுதாரிகள் வந்துள்ளதாக இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய காவலாளியிடம் தெரிவிக்கப்பட்ட 15

## தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம்



15

## யாழ் - கொழும்பு புகையிரத சேவை

### ஜுன் 1ஆம் திகதி முதல் மீள ஆரம்பம்

(கொழும்பு)

யாழ்.காங்கேசன்துறை - கொழும்பு இடையிலான ரயில் சேவை மீண்டும் ஜுலை 15ஆம் திகதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ரயில் பாதை திருத்தப் பணிகள் காரண 15

## பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று முதல் ஜுன் மாதம் 12ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை காரணமாக இன்று முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் 15

# வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட இன அழிப்பு

## சபையில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தமிழர் வாழும் பிரதேசங்களில் அவர்கள் கண்ணுக்கு தெரியாமல் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடைபெற்று கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் அளவீட்டை நிறுத்துக

### புத்தசாசன அமைச்சர் விதுர உத்தரவு

- உருத்திரபுரம் சிவன் ஆலய அளவீட்டுப் பணிகள் உடன் இடைநிறுத்தம்.
- குருந்தூர்மலைக்கு நீதவான் சென்று பார்வையிட்ட பின்னர் முடிவெடுக்கத் தீர்மானம்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியாவில் 6 வயது சிறுமி துஷ்பிரயோகம்

### இராணுவ அதிகாரிக்கு 15 வருட கடுழியச் சிறை

(வவுனியா)

ஆறு வயது பாடசாலை மாணவி மதிய நேரம் பாடசாலை விட்டு வந்தபோது அவரை காட்டுக்குள் கடத்தி சென்று துஷ்பிரயோ 15

வடக்கு மாகாணத்தில் நிலவும்

## குடிநீர் பிரச்சினையை தீர்க்க ஒத்துழைப்பு

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளும் நிச்சயம் வழங்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் 15

வனவள மற்றும் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டிலுள்ள

## கணிசமான காணி, குளங்களை விடுவிப்பதற்கு தீர்மானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டி[illegible] மற்றும் குளங்களை விடுவிப்பதற்கு தீர்மானம், மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில், வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் ஆகியவற்றின் கீழுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் நேற்று கலந்துரையாடப்பட்டது.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழ...

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த அளவீட்டு பணிகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்தி வைக்குமாறு புத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உத்தரவிட்டார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க விற்குமிடையில் நேற்று நடந்த சந்திப்பின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் அரச தரப்பில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சின் செயலாளர், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்களும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ் கட்சிகள் தரப்பின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் ஆகியோரும், ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனும் கலந்து கொண்டனர்.

இதன்படி, உருத்திரபுரம் சிவன் ஆலயம் உள்ளிட்ட வடக்கு கிழக்கிலுள்ள சை ஆலயங்கள், வழிபாட்டிடங்களில் அளவீட்டு பணிகளை உடனடியாக நிறுத்த அமைச்சர் உத்தரவிட்டார்.

குருந்தூர் மலைக்கு நீதவான் சென்று பார்வையிட்ட பின்னர் கூடித் தீர்மானம் எடுப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

(ம-7.9.315.316

## கணிசமான...

தமையினால் காடுகளாக மாறியிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் மக்கள் குடியிருப்புக்களும் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தினாலும் வனஜீவராசிகள் திணைக்களத்தினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் 85 ஆம் ஆண்டிற்கு முன்னர் விவசாய நிலங்களாகவும் மக்கள் குடியிருப்புக்களாகவும் இருந்தமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை கொண்ட காணிகளையும் கணிசமானளவு குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7.9.315.316)


**அனைத்து வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க கொனிக்கா கலர்லாப்பின் அதிரடி விலைக்கழிவு**

4R : 30/=

10X15 : 250/=

கலர்பிறிண்டிங் A3 : 45/=

(15737)



# மணிவிழா வாழ்த்து



திருமதி

**ஹெலன் றோஸ் ஜெகநாதன்**

SLTS - I

Best Wishes!

**சேவை விபரம்**

- மன்/முள்ளிக்குளம் றோ.க.த.க பாடசாலை 15.03.1990 - 31.01.1992
- மன்/அரிப்பு றோ.க.த.க பாடசாலை 01.02.1992 - 14.01.1994
- மன்/கொக்குப்படையான் றோ.க.த.க. பாடசாலை 15.01.1994 - 31.07.1995
- மன்/நாவற்குளம் றோ.க.த.க பாடசாலை 01.08.1995 - 24.01.1999
- மன்/ சிலாவத்துறை அ.மு.க பாடசாலை 25.01.1999 - 23.10.2005
- மன்/சாவேரியார்புரம் றோ.க.த பாடசாலை 24.10.2005 - 20.01.2009
- யா/ மாதகல் சென்தோமஸ் றோ.க.பெ பாடசாலை 21.01.2009 - 31.12.2013
- யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் 01.01.2014 - இன்று வரை

**2023.05.26 இன்று ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் ஆசிரியர் திருமதி ஹெலன் றோஸ் ஜெகநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்போடு அமைய இறையருளை வேண்டுகின்றோம்.**

(15720)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்**


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## உயர் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி
## (SLQF - 4) - 2023/2024 (அணி - II)

உயர் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

1. க.பொ.த. உயர்தரத்தில் ஏதேனும் 03 பாடங்களில் குறைந்தபட்சம் "S" தரங்களுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. சம்பந்தப்பட்ட துறையில் SLQF நிலை 3 அல்லது NVQ நிலை 5 டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் மேலும் வயது எல்லை 18 முதல் 28 ஆக அமைந்திருப்பதுடன், அரசு விளையாட்டு அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் அரசு விளையாட்டு பயிற்சியாளர்களாக பணிபுரிபவர்களுக்கு வயது எல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
3. இக் கற்கைநெறிக்காக 50 மாணவர்கள் உள்வாங்கப்படுவதுடன் விண்ணப்பதாரர்களின் உளச்சார்பு மற்றும் விளையாட்டுக்கள் சார் அறிவு, எழுத்து மூல தெரிவுப்பரீட்சையின் மூலம் பரிசீலிக்கப்படும்.
4. அத்துடன் உடல் உறுதி மற்றும் விளையாட்டு திறன் என்பனவும் செயல் முறைப் பரீட்சையினால் பரிசீலிக்கப்படும்.

**கற்கைநெறிக்கான காலம்** - இரண்டு வருடம் **கற்கை மொழி** - தமிழ்

**கற்கைநெறிக்கான கட்டணம்** - ரூபா. 148,000.00

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவ கட்டணம்- | ரூபா 2,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 1,000.00 |
| கல்விக் கட்டணம் | ரூபா 140,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | ரூபா 4,000.00 |
| நூலகக்கட்டணம் (திரும்பப்பெறத்தக்கது) | ரூபா 1,000.00 |

இக் கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தினை யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாகவோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தின் முகவரி மூலமாகவோ பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்து, விண்ணப்பப் படிவத்துடன் க.பொ.த உயர்தர கல்வித்தகைமை சான்றிதழ் (A/L Result Sheet) பிரதியையும், ஏனைய கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றின் பிரதிகளையும், விண்ணப்பக் கட்டணம் 2000/= ஐ மக்கள் வங்கிக் கிளையின் 780022230002966 கணக்கிலக்கத்தில் வைப்புச்செய்து, வைப்புச்சீட்டின் பிரதியையும் இணைத்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 வரை) நேரடியாகவோ அல்லது பின்வரும் முகவரிக்கு **பதிவுத்தபால்** மூலம் **30.06.2023 (வெள்ளிக்கிழமை)** இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

**"உதவிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ் பல்கலைக்கழகம்."**

மேலதிக விபரங்களை 021-222-3612 எனும் எண்ணை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்
25.05.2023

(C-6616)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

01. தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.
02. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணிவரை **26.05.2023** ஆம் திகதியிலிருந்து **08.06.2023**ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **26.05.2023** தொடக்கம் 09.06.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி **09.06.2023** ஆம் திகதி **15:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக்கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக ,ரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
06. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடியாகும் காலம். |
| 1 | Desk Top Computer with UPS | 05 Nos | NP/14/41(13)/3/1/15/ Desk Top Computer/2023 | 01 மாதம் | 10,000.00 | 03 மாதம் (09.09.2023) |
| 2 | Photocopy Machine | 01 Nos | NP/14/41(13)/3/1/15/ Photo Copier /2023 | | 10,000.00 | 03 மாதம் (09.09.2023) |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**

26.05.2023

(C-6617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலநறுவையிலுள்ள சிவாலயங்கள் பௌத்த தேரர்களின் கைவசம்

## பொலநறுவை இந்துக் குருமார் ஒன்றியம் குற்றச்சாட்டு

**(பொலநறுவை)**

**பொலநறுவையில் பல பழைமையான சிவாலயங்கள் அழிக்கப்பட்டு மறைக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், இதனைச் சில பௌத்த பிக்குகள் இணைந்து முன்னெடுத்து வருவதாக பொலநறுவை மாவட்ட இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ து.சத்தியநாதன் சர்மா குற்றம்சாட்டியுள்ளார்.**

தமிழர்களின் பூர்வீகக் காணிகளையும் அபகரிக்கும் செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். பொலநறுவை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அதிகளவில் வாழ்கின்றனர். பழைமையான சிவாலயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்களுக்கு சிறந்த அரசியல் தலைமைத்துவம் இல்லை.

முத்துக்கல் என்னும் கிராமத்தின் காட்டுப் பகுதியில் சிவாலயம் ஒன்று மறைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த சிவலிங்கம் உடைக்கப்பட்டுள்ளது. அங்கு பல புராதன சின்னங்கள், எழுத்துக்கள் உள்ளன. அந்த ஆலயங்கள் பௌத்த தேரர்களின் கைவசம் சென்றுள்ளது.

அந்த இடத்திற்கு செல்வதற்கு எங்களை அனுமதிப்பதில்லை. அங்கு பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன.

தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் புதையல்கள் தோண்டப்படுவதாக தகவல்கள் வருகின்றன.

பல்வேறு பிரச்சினைகளுடன் மக்கள் வாழுகின்றார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## தமிழக யாசகர் இலங்கைக்கு நன்கொடை

(கொழும்பு)

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நன்கொடை அளித்த தமிழக யாசகர் பூல்பாண்டியன், தமது கடைசி நன்கொடையை தமிழக முதலமைச்சர் நிதிக்கு வழங்கியுள்ளார்.

இதன்படி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் அவர் 10 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கினார்.

தமிழக அரசின் நிவாரண நிதிக்கு நன்கொடை அளிப்பது என்ற நடைமுறையை 75 வயதான பூல்பாண்டியன் வழக்கமாக கொண்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் பூல்பாணடியன் 50 லட்சம் ரூபாவை தமிழக அரசுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்தநிலையில், தமக்கு வயதாகிவிட்டதால் யாசகம் செய்வதை விடுத்து, கோயில்களுக்கு செல்வதன் மூலம், வாழ்க்கையை செலவிட திட்டமிட்டுள்ளதாக பூல்பாண்டியன் குறிப்பிட்டுள்ளார். (நி)

## பல்கலைக்கழகங்களுக்கான பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மூன்று பல்கலைக்கழகங்களுக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுட்டுள்ளது.

பல்கலைக்கழக உபவேந்தர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, களனி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் மாணவிகளுக்கு பாதுகாப்பு இன்மை என்பன அதிகரித்துள்ளதால் இந்தப் பாதுகாப்பு அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லவாய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பாடசாலை மாணவன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீடொன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் பாடசாலை மாணவர் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

அவர் இந்த வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)



## ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்

### ஜனகரத்நாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனகரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து தான் அகற்றப்பட்டமை இலங்கை மக்களிற்கு ஏற்பட்ட தோல்வி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது எனது தோல்வியில்லை. இது இலங்கையின் அனைத்து மக்களினதும் தோல்வி. இதனைப் பற்றி எனக்கு எந்த பிரச்சினையுமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன் என நான் முன்னரே உறுதியாக தெரிவித்துள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இலங்கையில் நேற்று முன்தினம் புதன் கிழமை 15 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் மொத்த கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 672,408 ஆக உயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்

### பொதுமக்களுக்கு பவ்ரல் அறிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர் பெயர்ப் பட்டியல் தொடர்பில் இதுவரையில் கிராம உத்தியோகத்தரிடமிருந்து எவ்வித அறிவித்தலும் கிடைக்கப் பெறாதவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல் அலுவலகத்தை நாடி உரிய ஆலோசனைப் பெற்றுக் கொள்ளுமாறு பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பப்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் இறையாண்மையின் ஒரு அங்கமான வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கு வாக்காளர்களாக அனைவரும் தம்மை பதிவு செய்வது கட்டாயத் தேவையாகும்.

மக்கள் இறையாண்மையின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் வாக்களிக்கும் உரிமை இருந்தாலும் வாக்காளர் பதிவேட்டில் அவர்களது பெயர் இடம் பெற்றால் மட்டுமே அதைச் செயற்படுத்த முடியும்.

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் இதுவரையில் தொடர்பு கொள்ளவில்லை எனில் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவரை அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்தை நாட வேண்டும்.

அதேவேளை கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவர் இறந்துவிட்டாலோ அல்லது வசிப்பிடத்தை மாற்றியிருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் இந்த ஆண்டு பதிவுக்கு தகுதி பெறாமல் இருந்தாலோ அதனை கிராம அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும். பதிவு செய்தல் மற்றும் வாக்களிப்பது பிரஜைகளின் உரிமையும் மற்றும் பொறுப்புமாகும் என அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

## இலங்கையில் மீண்டும் வாகன இறக்குமதி

(கொழும்பு)

ஜப்பானிய வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வாகன நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துடனுமான கலந்துரையாடலிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையின் வாகன இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தும் இருந்தனர்.

அந்த நிலையில் அண்மையில் கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதுவரும் சுதந்திர வர்த்தகம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனால் மிக விரைவில் மீண்டும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட அதிக வாய்ப்பு உள்ளதாகத் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வடமராட்சி வடக்கு தும்பளை
## நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

# வருடாந்த வெளிமடை உற்சவம்

**2023.05.26 - 27ஆந் திகதி**

## அறிவித்தலும் ஆசித்தலும் பூஜித்தலும்

### நெல்லண்டை அம்மன் துதி

உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்
உக்கிரமாய் தாண்டவமும் ஆடிக் கொண்டாய்
சிலகாலம் சிவன்நோக்கி நிட்டை கொண்டாய்
சிட்டர்களுக்கு அபயகரம் நீட்டி ஆண்டு நின்றாய்
பலவகை தருமங்கள் போதித்தாண்டாண்டாய்
பக்குவமாய் எம்பாச வினை நீக்கினாய்
நாம் சேர் உன்னருள் தரிசன ரூபியாய்
தினம் தினம் பொருள் கொண்டாழ்வாயோ!

நெல்லண்டை வாழும் அத்திமரத்தாய்
மனக்குறை எல்லாம் தீர்த்திடுவாய் - உன்
திருவடி தேடி வருபவரை
திருவருள் புரிந்தே காத்திடுவாய்.

சுபமங்களம் நிறைந்த சோபகிருது வருஷம் வைகாசி மாதம் (26.05.2023) வெள்ளிக் கிழமை, சனிக்கிழமை நடைபெற இருக்கும் அனைத்து தெய்வகைங்கரியங்களும் பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசி வேண்டியும் அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும் அனைத்து நிலை அடியார்களும் அன்பர்களும் உரித்தாளர்களும் வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம்.

**ஆசித்தலும் பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக.**

**மடைப்பண்டம் எடுத்தல் - பிற்பகல் 5.00 மணிப் பூஜையுடன் இடம்பெறும்**
**வளந்து வைத்தல் - இரவு 11.00 மணிக்கு நடைபெறும்.**

அன்னையின் அடிமை

சைவ சித்தாந்த பண்டிதர் **சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக்குருக்கள்**
பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்.
**சிவஸ்ரீ இராமசுந்தரலிங்கக்குருக்கள்**
**சிவஸ்ரீ சோம.தனஞ்சயக்குருக்கள்**

(C-6620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனை கொழும்பில் சந்தித்து கிழக்கு ஆளுநர் கலந்துரையாடல்



(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் தோட்ட உட்கட்டமைப்பு, நீர்வழங்கல் வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



**யாழ். தமிழர் பிரதிநிதிகளுக்கு தமிழ் மொழிபெயர்ப்புடன் புனித குர்ஆன் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் அவர்களுக்கு கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால் தமிழ்மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன்பிரதி வழங்குவதை படத்தில் காணலாம்.** (5729)

## வட்டுக்கோட்டை முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை துணவி தெலிண்டப்பிராய் முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்மஹோற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)




## வெளிவந்து விட்டது கலாநிதி.பா.தனபாலனின்



பாடசாலையில் உட்படுத்தல் கல்விப் பிரயோகங்கள்

**'ஒவ்வொரு பாடசாலையிலும் அதிபர், ஆசிரியர், கல்வித்துறை சார்ந்தோரிடம் இருக்க வேண்டிய நூல்'**

- எல்லோருக்கும் அவசியமான உட்படுத்தல் கல்வி அறிமுகம்.
- உலகளாவிய உட்படுத்தல் கல்வி முன்மொழிவுகள்.
- கற்பவர்களுக்குக் கற்பித்தல் தொடர்பான உலகளாவிய வடிவமைப்புக்கள். (Universal Design Of Learning For Learners- UDL)
- UDL இன் பிரகாரம் பாடங்களைத் திட்டமிடல்.
- விசேட கல்வி விருத்திப்படி நிலைகள், நிராகரிக்கும் பருவம், புனருத்தான பருவம், உள்ளடக்கும் பருவம், பாதுகாக்கும் பருவம், ஒருங்கிணைந்த பருவம்.
- பௌதீக ஒன்றிணைப்பு-செயற்பாட்டு ஒன்றிணைப்பு, சமூக ஒன்றிணைப்பு.
- தனிநபர்களுக்கான கல்வித்திட்டங்கள் (Individual Education) SIEP
- உட்படுத்தல் கல்வி தொடர்பான அதிபர், ஆசிரியர், கல்வித்துறையினரின் பங்குகள்.
- அபிவிருத்தி சார் காலதாமதத்தை மதிப்பிடல், இசைவாக்கும் சாதனங்கள்.

(5734)

வெளியீடு-குமரன் புத்தக இல்லம் - கொழும்பு,சென்னை

விநியோகம்- புக்லாப்-யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக

ஸ்ரீலங்கா புத்தகசாலை,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்

குமரன் புத்தக இல்லம், 39/36 ஒழுங்கை கொழும்பு-06


# இராசிபலன்

26.05.2023

வைகாசி 12, வெள்ளிக்கிழமை

சப்தமி முழுவதும்

ஆயிலியம் முன்னிரவு 08.16மணிவரை

சுபநேரம்-5.52-07.22 மணிவரை

இராகுகாலம்-10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்

வளவன்




வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அழகுசாதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும்.




இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, உங்களை விமர்சிப்பவர்களிடம் பெருந்தன்மை யோடு பழகுவீர்கள்.




செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் ஆற்றல் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும், குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.




ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், கடினமான வேலைகளைக் கூட எளிமையாக செய்து முடிப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நல்ல மனைவியால் கணவனும் நல்லவனாக மாறுவான்.

## பொலிஸாருக்கு போலி தகவல் சந்தேக நபரை தேடி விசாரணை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு ஆயுதம் தரித்த நபர்கள் மிரட்டல் விடுத்ததாக பொலிஸ் அவசர பிரிவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் வழங்கப்பட்ட தவறான தகவலால் பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் ஊர்மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

நபரொருவர் பொலிஸ் அவசர பிரிவுக்கு அழைப்பினை ஏற்படுத்தி தான் 'இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்குவதாக இனந்தெரியாத மூவர் ஆயுதங்களுடன் வந்து தன்னை மிரட்டி விட்டு சென்றிருப்பதாக முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் முறைப்பாடு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு அப்படியான அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறவில்லை எனவும் தாம் பொலிஸ் அவசர பிரிவுக்கு அழைப்பினை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திற்கு தகவல் வழங்கியவரை ஆயுததாரிகள் மிரட்டினர் என்ற போலியான தகவல் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் முறைப்பாடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் அம்மன் வருடாந்த திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியதுதொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 2ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் 3ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (படம்- சிவசாந்தன்)

## கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் யாழ். மாவட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சுவரொட்டி போட்டி என்பனவற்றை மாணவர்களிடையே நடத்தவுள்ளன.

மேலும் தரம் 5 முதல் 8 மற்றும் தரம் 9 முதல் 12 என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

ஆரோக்கியமான சுற்றுச் சூழலை பாதுகாப்போம், நஞ்சற்ற வீட்டுத் தோட்டத்தை உருவாக்குவோம், போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம் போன்ற தலைப்புக்களின் கீழ் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்திற்கு பாடசாலை மூலமாகவோ அல்லது நிறுவனத்தின் குழுவினர் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பத்தை இயக்குநர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டம், கியூடெக் கரிதாஸ் யாழ்ப்பாணம் இல.14 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.06. 2023இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். (4)

மெகா பவர் சீட்டிழுப்பு

## வடமராட்சி வாசி ஒருவருக்கு ரூ.10 லட்சம் அதிர்ஷ்டம்

(கரணவாய்)

மெகா பவர் விசேட சீட்டிழுப்பில் வடமராட்சி வாசி ஒருவருக்கு 10 லட்சம் ரூபாய் அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 23 ஆம் திகதி பார்க்கப்பட்ட சீட்டிழுப்பிலேயே அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

மந்திகை முகவர் இராமச்சந்திரன் சுதர்சனினால் இவ் சீட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ் முகவரால் கடந்த வாரம் விற்பனை செய்யப்பட்ட வலம்புரி சீட்டுழுப்பில் 20 லட்சம் ரூபா வெல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(4-6-60)



சர்வதேச முன்னணி வங்கியான எச்.எஸ். பி.சி வங்கியின் இலங்கைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட உயரதிகாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோருடன் கலந்துரையாடினர். (படம்-சிவசாந்தன்)

## வில்லவயடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வைகாசி பொங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம், வில்லவையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-6)

## 'மரணத்தில் பூர்த்த மலையகம்' 200 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

" மரணத்தில் பூர்த்த மலையகம்"எனும் தலைப்பில் மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என். இன்பம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

## இலங்கையின் முதலாவது தமிழ் திரைப்பட நடிகர் புவனேஸ்வரன் காலமானார்

(அராலி)

இலங்கையின் முதலாவது தமிழ் திரைப்படமான வெண்சங்கு திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்து பிரபலமடைந்த மூத்த கலைஞர் சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் நேற்று முன்தினம் வயது மூப்பு காரணமாக, யாழ். கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

இவர் கடந்த 26.10.1936 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை- சித்தங்கேணியில் பிறந்து, யாழ்ப்பாணம் - கந்தர்மடத்தடியில் வசித்து வந்துள்ளார். இவரது திரையுலகப் பயணம் இலங்கை தமிழ் திரையுலகில் ஒரு புதிய அத்திவாரமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கசிப்புடன் புத்தூரில் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் பகுதியில் வைத்து 23 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் 20 லீற்றர்கள் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு ஏற்கனவே ஒரு வழக்கு உள்ளதாகவும், அந்த வழக்குக்கு மல்லாகம் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)




## வடக்கு- கிழக்கு மீனவர்களுக்கு விரைவில் சீனாவின் மண்ணெண்ணெய்

அமைச்சர் டக்ளஸ்

(அராலி)

சீன அரசாங்கத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய் விரைவில் வடக்கு- கிழக்கில் உள்ள ஏழு கடற்றொழில் மாவட்டங்களுக்கும் வழங்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 27 ஆயிரம் படகு உரிமையாளர்களுக்கு, ஒருவருக்கு 150 லீற்றர் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதோடு இரண்டாம் கட்டமாக எஞ்சியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட மாகாணத்தில் உள்ள நான்கு கடற்றொழில் மாவட்டங்களுக்கும், கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று கடற்றொழில் மாவட்டங்களுக்கும் விரைவில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சீன அரசாங்கத்தின் உதவி திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளர்களுக்கான வீடு மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான வலைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

அது மட்டுமல்லாது எரிபொருள் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு பற்றியில் இயங்கக்கூடிய படகினை சம்பிரதாயபூர்வமாக கடலில் இறக்கியுள்ளோம்.

எரிபொருளிலும் பார்க்க பற்றியில் இயங்கும்படகு இலாபகரமானதாகவும் சூழலுக்கு மாசு இல்லாத தொழில்நுட்பமாக கருதும் நிலையில் அதனை இலங்கையில் விரிவுபடுத்துவதற்கான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே ஜப்பான் அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய அரசாங்கமும் கடற்றொழிலாளர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ள நிலையில் விரைவில் அதற்குரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6- 104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்- புங்கங்குளம் வில்வையடி

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

# பொங்கல் விழாச் சிறப்பிதழ்- 26.05.2023

## வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

**அம்பாளின் அருட்பார்வை**

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால் இந்தப் புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இன்றைக்கு சுமார் 57 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

**அம்பிகையின் தெய்வீகப் புதுமை**

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கு நடக்கிறதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.



**வில்வ மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை**
**அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை**
**பொல்லா வினையகல-- புங்கங்குளத் தூர் புகுந்து**
**கல்லும் கசிந்து ருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.**

**பொங்கல் விழா சிறப்புற பிரார்த்திப்போரும்**
**விளம்பர அனுசரணையாளர்களும்**

**அம்பிகையின் அருட்தோற்றம்**

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை. அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது. அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வ மரம். இந்த மரத்தின் அடியிலே தான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

**நம்பியே கை தொழுவோம் நாம்.**

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்வை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

மேன்மை கொள் வைச நீதி
விளங்குக உலகமெல்லாம்
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

*கே. வைத்திலிங்கம்* (சி-6609)


கட்டடப் பொருட்கள்,உழவு இயந்திரம், லாண்ட்மாஸ்ரர் உதிரிப் பாகங்கள் விநியோகஸ்தர்.
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச் சோலை**
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்ஜியம்)
125, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 2503

**புதிய தம்பிப்பிள்ளை அன் சண்**
இல 54, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை.
சகல விதமான கால்நடைத் தீவனங்களும் மருந்து வகைகளும் கோழிக்குஞ்சுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

**Vannam's studio**
We capture All Kind of Events
Punkankulam Jaffna.
077 352 1838

வில்வையடி,
**ஸ்ரீநாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட் தயாரிப்பு:T.S.நாதன்
இல.96/1 , ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021 222 0542

**மஹா விஷ்ணு ஹாட்வெயார்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712, மாம்பழம் சந்தி. T.P. 077 905 0185
510,நாவலர் வீதி, நல்லூர். T.P. 077 905 0185
புங்கன்குளம் சந்தி. T.P. 077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்- க.முருகேந்திரன்.
174, ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**மாருதி**
ரேடிங் சென்ரர்
16A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 021 222 2932

**தம்பிப்பிள்ளை அன் கோ**
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள், மருந்து வகைகள், கோழிக்குஞ்சுகள் விற்பனையாளர்கள்)
343,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே.021 222 3353.

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்.
**உதயா ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
79 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 4434

**Munchee** பிஸ்கட், **Ritzbury** சொக்லேட் ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்.
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
22, மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
**சானுகா** நகைமாடம்
64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே- 021 222 3700

**நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்**
**NEW LUCKY HARDWARES**
343, Kandy Road, Ariyalai,Jaffna.
T.P- 021 373 4432, 077 237 8062

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள
**பூரணி நகைமாடம்**
46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே 021 222 3121

AGSHARA ENTERPRISES
VANNAM'S DISIRIBUTOR
kanagarayan Kulam North, vavuniya.
T.P. 077 352 1838, 077 964 0500

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
158, 193, கஸ்தூரியார் வீதி.
தொ.பே- 021 222 8334

BANUJAN SAW MILL
STATE APPROVED TIMBER DEALER
NO.48, Punkankulam Road, Jaffna.

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்கேற்ப தங்கப் பவுண் நகைகளை நியாயமாகச் செய்து கொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
66 [illegible] மாதா கோவில் லேன், அரியாலை.
தொ.பே- 077 787 7760

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## மோடியிடம் உறுதியளித்தார் அவுஸ். பிரதமர்

**(கன்பெரா)**

**அவுஸ்திரேலியாவில் இந்து ஆலயங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்பவர்களிற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.**

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் அவுஸ்திரேலியப் பிரதமரை சந்தித்த பின்னர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்கள், பிரிவினைவாத அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து இரு தலைவர்களும் மீண்டும் ஆராய்ந்தனர்.

தங்களின் நடவடிக்கைகள், சிந்தனைகள் மூலம் இந்தியா -அவுஸ்திரேலியாவிற்கு



இடையிலான நல்லுறவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த சக்தியையும் சகித்துக் கொள்ளப் போவதில்லை என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நான் ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகளிற்காக அவுஸ்திரேலிய பிரதமருக்கு நன்றி தெரிவித்தேன். எதிர்காலத்தில் அவ்வாறான சக்திகளிற்கு எதிராக வலுவான நடவடிக்கை எடுப்பேன் என அவுஸ்திரேலிய பிரதமர் உறுதியளித்தார் என நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் மெல் பேர்னில் உள்ள ஸ்வாமி நாராயணன் ஆலயத்தின் மதில்களில் இந்துஸ்தான் மெர்டாபாத் என எழுதப்பட்டமை குறித்து அவுஸ்திரேலிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

மெல்பேர்னில் வேறு இரண்டு ஆலயங்கள் இலக்கு வைக்கப்பட்டன என தகவல்கள் வெளியாகியிருந்தன.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் காலிஸ்தான் ஆதரவு அமைப்புகள் தங்கள் சமூகத்தினர் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி)


## கேள்வி அறிவித்தல்-நல்லூர் பிரதேச சபை
## சபைநிதி/அபிவிருத்தி வேலைத்திட்டம்-கட்டம் III

1. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii)ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச்சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தைக் கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்குப் பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி ,கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700, 021-314-2841)** இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு,நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2023.05.29 திகதியிலிருந்து 2023.06.19 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில்காலை 9.00 தொடக்கம் பி.ப 15.00** மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபாய் 6,000.00** (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2023.06.20** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
9. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2023.06.07** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் **மு.ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/DF-III/2023/KSO/01 | கொக்குவில் உப அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாணம் | 28.37 | 90 நாட்கள் | C6, C5, C4 (கட்டிடம்) | 91 நாட்கள் | 425,600.00 | 2023.10.16 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

26.05.2023

(சி-6615)


### அமெரிக்காவில் சூறாவளி

## கட்டடம் இடிந்து விழுந்து இருவர் பலி, 7 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் கான்ரோவில் நேற்று கடும் சூறாவளி புயல் தாக்கியது. மேலும், இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், நகரின் பல வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது.

தண்ணீரால் நகரம் சூழ்ந்து வெள்ளக் காடாக காட்சியளித்தது. அப்போது, புதிய கட்டுமானத்தில் இருந்த வீடு ஒன்று திடீரென் சரிந்து விழுந்து தரைமட்டமானது. கட்டுமானப் பணியில் இருந்தவர்கள் அங்கு தங்கியிருந்த நிலையில் விபத்தில் சிக்கினர்.

இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்த மீட்புப் படையினர் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர். இதில், இரண்டு பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 7 பேரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# உயிர் உரத்தின் (Biofertilizer) மகிமை

இன்றைய நவீன உலகில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவுத்தேவை அதிகரித்துள்ளது. விவசாயத்திற்கு தேவையான நிலத்தின் அளவு நகர மயமாக்கல், காலநிலை மாற்றத்தால் மண்வளம் குறைதல் மற்றும் சில பேரிடர்கள் போன்ற காரணிகளால் குறைந்து வருகிறது.

உணவுத் தேவை அதிகரிக்கும் அதேவேளையில் விவசாய நிலம் குறைவடைதல் அலகு நிலப் பரப்பிலிருந்து அதிக பயிர்உற்பத்தி (Crop productivity) செய்ய வேண்டிய சவாலான நிலையை உருவாக்கியுள்ளது. பயிரின் உற்பத்தி திறனை அதிகரிக்க பயிரிற்கு அதிக ஊட்டச்சத்து தேவைப்படும்.

மண்ணின் ஊட்டச்சத்து போதாமையால் உரத்திற்கான தேவை ஏற்பட்டது. இரசாயன உரத்தில் தேவையான ஊட்டச் சத்து செறிவாக காணப்படுவதால் குறைந்தளவு ஊரம் போதுமானதாக உள்ளது.

சேதனப்பசளை அதிக அளவில் தேவைப்படும், மூலப்பொருள் தட்டுப்பாடு, நிர்வகித்தல் கடினம் போன்ற காரணிகளால் வணிக விவசாயத்தில் (Commercial agriculture) பயன்படுத்துவதில் சிக்கல் காணப்பட்டது. சிறிய அளவு விவசாயத்தில் இயற்கை உரம் பயன்படுத்தப்பட்டது.

இரசாயன உரப் பயன்பாட்டின் போது அவை நிலத்தடி நீரையடைந்து நீர் நிலைகள் மாசுபட்டது. இவ் மாசுபட்ட நீரால் உயிரினங்களுக்கு பல சுகாதார பிரச்சனைகளை ஏற்பட்டது. இவ் இரசாயன பசளையிலுள்ள சில நச்சுப்பதார்த்தங்கள் நிலத்தில் செறிவடைந்து மற்றும் நீர்நிலைகளை அடைந்து உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இரசாயனப் பதார்த்தங்கள் மண்ணிலுள்ள நன்மைபயக்கும் இயற்கை நுண்ணங்கிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி மண்ணிலும் வளத்தை குறைக்கிறது. இலங்கை அரசால் செயற்கை உரத்திற்கு விதிக்கப்பட்ட தடை மற்றும் இரசாயன உரத்தின் அதிகரித்த விலை போன்ற காரணிகளால் செயற்கை உரத்தின் பயன்பாட்டை குறைத்து இயற்கை உரத்தை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்ப்பட்டது. இயற்கை உரத்திலோர் அங்கமாக உயிர் உரம் (Biofertilizer) பயன்படுத்தப்படுகிறது.

உயிர் உரம் என்பது உயிருள்ள நுண்ணுயிரிகளை கொண்ட மண் ஊட்டப்பொருளாகும். இதை மண், விதை மற்றும் தாவரங்களில் பயன்படுத்தினால் மண்ணின் வேர் உயிர்க்கோளம் (Rhizosphere) அல்லது தாவரத்தின் உட்பகுதிகளில் குடியேற்றம் செய்யும். இவ் உயிருரம் தாவரங்களுக்கு முதன்மை ஊட்டச்சத்தை அளிக்கிறது அல்லது ஊட்டச்சத்து கிடைக்கும் தன்மையை அதிகரித்து வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது.

பெயர் "தாவரத்தின் வேர்வளர்ச்சி ஊக்குவிக்கும் ரைசோபாக்டீரியா" (Plant growth promoting rhizobacteria) ஆகும்.

உயிர் உரங்களான ரைசோபியம் (Rhizobium), அஸோடோபாக்டர் (Azotobacter), அசோஸ்பைரில்லம் (Azospirillum) மற்றும்நீலப்பச்சைபாசி ஆகியவை பல காலமாக உபயோகத்தில் உள்ளன. ரைசோபியம் உள்ளீடு (Rhizobium inoculant) முடிச்சு பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

அஸோ டோபாக்டர் (Azotobacter) கோதுமை, சோளம், கடுகு, பருத்தி, உருளைக்கிழங்கு மற்றும் இதர காய்கறி பயிர்களுக்கு பயன்

### உயிர் உரத்தின் வகைகள்

| வகைகள் (Types) | உதாரணங்கள் (Examples) |
|---|---|
| 1. தழைச்சத்தை நிலைப்படுத்தும் உயிர் உரங்கள் (Nitrogen fixing biofertilizers) | |
| ✓ தன்னிச்சையாக வாழ்தல் (Free living) | *Anabaena; Nostoc, Azotobacter* |
| ✓ இணைவாழ்தன்மை (Symbiotic) | *Rhizobium, Anabaena azollae* |
| ✓ கூடிசேரும்இயல்புடைய இணைவாழ்தன்மை (Associate symbiotic) | *Azospirillum* |
| 2. மணிச்சத்தை கரைக்கும் உயிர் உரங்கள் (Phosphorous solubilising biofertilizers) | |
| ✓ நுண்ணுயிரி (Bacteria) | *Bacillus megaterium* |
| ✓ பூஞ்சை (Fungi) | *Penicillium* sp. |
| 3. மணிச்சத்தை இடம்பெயரச்செய்யும் உயிர் உரங்கள் (Phosphorous mobilising biofertilizers) | |
| ✓ குமிழியுடைய மரம் போன்ற வேர்சூழ் பூசணம் (Arbuscular mycorrhiza) | *Glomus* sp, *Gigaspora* sp |
| ✓ வெளிவேர் உட்பூசணம் (Ectomycorrhiza) | *Amanita* sp |
| ✓ ஆக்கிட் வேர் உட்பூசணம் (Orchid mycorrhiza) | *Rhizoctonia solani* |
| 4. நுண்ணூட்டச் சத்துக்கான உயிர் உரங்கள் (Biofertilizers for micronutrients) | |
| ✓ சிலிக்கேட் மற்றும் துத்தநாக கரைதிறன்கள் (Silicate and Zinc solubilizers) | *Bacillus* sp |
| பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கும் வேர் நுண்ணுயிரி (Plant growth promoting Rhizobacteria) | |
| ✓ சூடோமோனஸ் ( *Pseudomonas*) | *Pseudomonas fluorescens* |

### உயிர் உரத்தின் பண்புகள்

உயிர் உரங்கள் தழைச்சத்தை (Nitrogen) வேர் முடிச்சில் பொருத்துதல், மணிச் சத்தை கரைத்தல் (Phosporus solubilizing) ஆகிய இயற்கை முறைகள் மூலம் சத்துக்களைச் சேர்க்கும் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்களை உருவாக்கி அதன் மூலம் தாவரத்தின் வளர்ச்சியைத் தூண்டும். இரசாயன உரங்களின் பயன்பாட்டை உயிர் உரங்கள் குறைக்கும்.

உயிர் உரங்களிலுள்ள நுண்ணுயிரிகளை மண் இயற்கை ஊட்டச்சத்து சுழற்சியில் மீட்டு மற்றும் மண் கரிமப்பொருட்களை அதிகரிக்கும். உயிர் உர்த்தின் பயன்பாட்டின் மூலம் செடிகள் ஆரோக்கியமாக வளரும், அதே சமயம் பேண்தகைமை மற்றும் மண்வளம் அதிகரிக்கும். நுண்ணுயிரிகளுக்கு பற்பல உபயோகங்கள் இருப்பதால், இதுபோன்ற நன்மை [illegible] ரியாக்களுக்கு [illegible] அறிவியல்

படுத்தலாம். அசோஸ் பைரில்லம் (Azospirilluminoculations) பெரும்பாலும் சோளம், கரும்பு ஆகியவற்றிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பொது நீலப்பச்சை நுண்ணுயிரி பேரினமாகிய Nostoc, Tolypothrix,Aulosira சேர்ந்த நீலப்பச்சை பாசி வளிமண்டல நைட்ரஜனை மேட்டு நில மற்றும் தாழ்வு நில சூழ்நிலையில் வளர்ந்த நெற்பயிர் சாகுபடியை ஊட்டம் செய்ய பயன்படுகின்றன. அனபீனா (Anabaena) தண்ணீர்பன்னம் அசோலாவுடன் இணைந்து நைட்ரஜன் அளிப்பதுடன் மண்ணிற்கு உயிர்ம பொருட்களை மிகுதிப்படுத்துகிறது. Pantoea agglomerans திரிபு P5 அல்லது Pseudomonas pudita திரிபு P13 என அழைக்கப்படும் பொஸ்பேட்டை கரைக்கும் பாக்டீரியாக்களால் கரிம மற்றும் கனிம பொஸ்பேட் ஆதாரங்களில் இருந்து கரையாத பொஸ்பேட்டை கரைக்க முடியும்.

### உயிர் உரத்தின் நன்மைகள் (Advantages of Biofertilizers)

உயிர் உரம் வாழும் பொருள் என்பதால் அவை பாதுகாப்பாக தாவர வேர்களுடன் இணைந்து சிக்கலான கரிமப் பொருட்களை எளிய கலவைகளாக மாற்றி விடும். தாவரங்கள் இவற்றை எளிதில் எடுத்துக் கொள்ளும். நுண்ணுயிரி செயற்பாட்டின் கால அவகாசம் மிக அதிகம். இதனால் மண்வளம் அதிகரிக்கும். அது மண்ணின் இயற்கை வாழ்விடத்தை பராமரிக்கிறது. இது பயிர் விளைவை அதிகரிக்கிறது. இது இரசாயன நைட்ரஜன் மற்றும் பொஸ்பரஸ்ஸை, குறைத்து, தாவரத்தின் வளர்ச்சியை தூண்டுகிறது.

இதனால் வறட்சி மற்றும் சில மண் மூலம் பரவும் நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வழங்கக்கூடும். உயிர் உரங்கள் இரசாயன உரங்களைக் காட்டிலும் விலை குறைந்தவை. விவசாயத்தில் உயிர் உரத்தின் பயன்பாடு ஓர் சூழல் நேயமான வழிமுறையாகும்.

மேலும், நல்ல தரமுள்ள பொருள் கிடைக்காமை மற்றும் தகுதியுள்ள தொழில் தெரிந்த ஆட்கள் உற்பத்திப் பிரிவில் குறைவாகக் காணப்படுதல், ஆய்வுகூடங்கள், உற்பத்திக்கான இடங்கள், தேவையான கருவிகள் மற்றும் மின்சாரம் போதுமான அளவில் இல்லாது இருத்தல், போதிய நிதி இல்லாமை, விவசாயிகளுக்கு இதனை பயன்படுத்துவதில் போதிய தெளிவின்மை என்பன உயிர் உரத்தின் உற்பத்தியில் சவாலான நிலையை உருவாக்கியுள்ளது.

எனவே அரசு உயிர் உரம் பற்றிய தெளிவை விவசாயிகளிடம் ஏற்படுத்தி அவற்றின் உற்பத்தியையும் பயன்பாட்டையும் அதிகரிக்க வேண்டும். சரியான திட்டமிடலுடன் பொருத்தமான உயிர் உரத்தினை உரிய பயிரிற்கு தேவையான அளவில் பயன்படுத்தி மண் வளத்தை பேணி பயிரின்உற்பத்தி திறனை அதிகரிப்பதுடன் நோய் நொடியற்ற சுகாதாரமான வாழ்வு வாழலாம்.

இனோஜா சிவானந்தன்
செயன்முறை வழிகாட்டுநர்
தாவரவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணி சுவீகரிக்கும் முயற்சி தடுத்து நிறுத்தம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியினை, 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்பட்ட முயற்சி அப்பகுதி மக்களாலும் மக்கள் பிரதி நிதிகளாலும் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.**



குறிப்பாக நிலஅளவை திணைக்களத்தினர் மற்றும் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியினை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந் நிலையில் மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் குறித்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு குறித்த காணியினை அளவீடு செய்து, இராணுவத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்க முடியாதென அப்பகுதிமக்களாலும்மக்கள் பிரதிநிதிகளாலும் அங்கு வருகை தந்த நிலஅளவைத் திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நிலஅளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். (4-6)

## குருந்தூர் மலை ஆர்ப்பாட்டம் ரவிகரன், மயூரன் கைது செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டசெயலாளருமான துரைராசா ரவிகரன் மற்றும் முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில், நீதிபதி சரவணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணையின்போது ரவிகரன் மற்றும் மயூரன் ஆகியோருக்கு ஆதரவாக நீதிமன்றிற்கு வருகை தந்த அனைத்து சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## மஹோற்சவம்

(கண்டாளை)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 2ம் திகதி தேர்த் திருவிழாவும் 3 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

## பரீட்சை அனுமதி அட்டையை தர மறுத்த ஆசிரியர்

### வலயக்கல்வி பணிமனையில் முறைப்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் பாடசாலை ஒன்றில் கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சைக்கு தோற்றும் மூன்று மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை ஆசிரியர் ஒருவர் வழங்க மறுத்ததால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வலயக்கல்வி பணிமனையில் முறையிட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சாதாரண பரீட்சைகள் நடைபெற உள்ள நிலையில் அதற்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகளில் சுபநேரங்களில் வழங்கப்பட்டன.

இதில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று வரும் மூன்று மாணவர்களுக்கான அனுமதியட்டைகளை ஆசிரியர் ஒருவர் வழங்க மறுத்துள்ளார். பாதிக்கப்பட்ட மணவர்கள் பலதடவை கேட்ட போதும் அதனை குறித்த ஆசிரியர் வழங்க மறுத்துள்ளார்.

மேற்படி பாடசாலை அதிபரிடம் மாணவர்கள்சென்று முறையிட்ட நிலையில் அதிபரின் உத்தரவையும் குறித்த ஆசிரியர் உதாசீனப்படுத்தியுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று முன்தினம் பாடசாலையில் இருந்து சுமார் 26 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு சென்று முறைப்பாடுகளை தெரிவித்துள்ளனர்.

குறித்த மூன்று மாணவர்களும் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் வலயக்கல்வி திணைக்களத்தில் முறையிடுவதற்கு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்து செய்து குறித்த முறைப்பாட்டை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

## கசிப்புடன் கைதானவர் மறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் 20 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் 20 லீற்றர் கசிப்பு உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபர் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளை யிட்டுள்ளது. (4-6-315)

## கிணற்றினுள் வீழ்ந்த யானைக் குட்டி மீட்பு நடவடிக்கை தீவிரம்



(நெளுக்குளம்)

வவுனியா மடுக்கந்த பகுதியில் யானைக்குட்டி ஒன்று கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த நிலையில் அதனை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பயன்படுத்தப்படாத கிணற்றினுள் யானைக்குட்டி ஒன்று தவறி வீழ்ந்தமையை அவதானித்த கிராமவாசிகள் இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் யானைக்குட்டியை மீட்கும் நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதேவேளை குறித்த குட்டியின் தாய் யானை அந்த பகுதியில் உலாவித் திரிவதால் மீட்புப் பணியில் தொய்வு நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

## சாவகச்சேரியில் 18 பவுண் நகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி நகர் காளி கோவில் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தாலிக்கொடி, காப்பு,சங்கிலி மற்றும் மோதிரம் என சுமார் 18பவுண் நகை திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் உள்ள முதியவர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குடும்ப உறுப்பினர்கள் அவரைப் பார்வையிட சென்றிருந்த வேளையில் மேற்படி திருட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)

## ஏணிப்படி வழக்கிலிருந்து வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத்தினர் விடுதலை

(நெளுக்குளம்)

வவுனியா வெடுக்குநாறி மலையில் ஏணிப்படி பொருத்தியமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு நேற்றையதினம் வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு போதிய சான்றுகள் இன்மையால் குறித்த வழக்கில் இருந்து ஆலயப்பூசகர் மற்றும் நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு அருள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,கடந்த 2019 ஆம் ஆண்டு ஆலயத்தில் மரத்திலான ஏணிப்படி ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதனை சீரமைத்து ஏணிப்படி ஒன்று அமைக்கப்பட்டமை தொடர்பாக வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த ஏணிப்படியை சீரமைத்தமைக்கான சான்றுகள் இல்லை என அரச சட்டவாதிகளால் நீதிமன்றிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த மூன்று பேரும்விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவித்தார்.(4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 145

# நிறுவனமொன்றின் நேர்முகத் தேர்வில் கேட்கப்பட்ட கேள்வி

ஒரு நிறுவனம், வேலைக்கு ஆட்கள் தேவை என்று அறிவித்தது.

அதன்படி நேர்காணலுக்கு வந்திருந்த அனைவரையும் ஒரு அரங்கத்தில் உட்கார வைத்து அவர்களிடம் வினாத்தாள்களும் விடைத்தாள்களும் வழங்கப்பட்டன.

இப்பொழுது அந்த நிறுவன மேலாளர் பேசினார்.

இந்த வினாத்தாளில் பத்துக் கேள்விகள் உள்ளன. உங்களுக்கு ஐந்து நிமிடம் நேரம் ஒதுக்கப்படும். அதற்குள் இந்த வினாக்களுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டும். தகுதியுடைய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலை வழங்கப்படும் என்றார்.

ஐந்து நிமிட நேரம் ஆரம்பமானது.

நேரம்குறைவாக உள்ளது என்று அனைவரும்வேகமாகப் பதில் எழுதினர். நேரம் முடிந்த பின், அனைவரிடமும் விடைத்தாள்களை வாங்கினார் மேலாளர்.

விடைத்தாளை வாங்கும் போது ஒவ்வொருவரும் நேரம் குறைவாக கொடுத்து விட்டீர்கள். எங்களால் ஐந்து கேள்விகளுக்கும் ஏழு கேள்விகளுக்கும் பதில் எழுத முடிந்ததே தவிர. அனைத்து வினாக்களுக்கும் பதில் எழுத முடியவில்லை என்றனர்.

அதில் இருவர் மட்டும் எந்தப் பதிலும் எழுதவில்லை என்று வெற்றுத்தாளை மேலாளரிடம் கொடுத்தனர்.

அதன்பின், அந்த நிறுவன மேலாளர் சொன்னார்.

விடைத்தாளில் பதில் எழுதாத இவர்கள் இருவர் மட்டும் இந்த நிறுவனத்தில் வேலை செய்யத் தகுதியானவர்கள். மற்றவர்கள் வீட்டிற்குச் செல்லலாம் எனக் கூறினார்.

அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். அனைவரும் ஒருசேர அந்த நிறுவன மேலாளரிடம் கேட்டனர். வினாக்களுக்கு சரியான பதிலளித்த எங்களுக்கு வேலை இல்லை என்கிறீர்கள். எந்த வினாக்களுக்கும் பதில் அளிக்காத அந்த இருவருக்கு மட்டும் எப்படி வேலை கொடுத்தீர்கள் என்றனர்.

(இந்த இடத்தில் நமக்குள் தோன்றும் கேள்வியும் இதுதான். பதில் அளித்தவர்கள் இருக்க, பதில் அளிக்காதவர்களுக்கு வேலையா?)

அதற்கு அந்த மேலாளர் சொன்னார். எல்லோரும் அந்த பத்தாவது கேள்வியை படித்துப் பாருங்கள் என்றார்.

படித்துப் பார்த்த அனைவரும் பதிலேதும் பேச முடியாமல் வீட்டிற்குச் சென்றனர்.

அந்த பத்தாவது கேள்வி இது தான்.

10) மேற்கண்ட எந்த வினாக்களுக்கும் நீங்கள் பதில் அளிக்க வேண்டாம்? என்பதாகும்.

இது சிரிக்க வேண்டிய விடயம் அல்ல. நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயம். இரண்டு நிமிடம் நேரம் ஒதுக்கி வினாத்தாள் முழுவதையும் படித்திருந்தால் வேலை நிச்சயம் கிடைத்திருக்கும் அல்லவா?

இந்த நவீன யுகத்தில் பிள்ளைகளை படி படி என்று படிக்கச் சொல்லி நிறைய மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்று நினைக்கிறோமே தவிர. நம் பிள்ளைகள் நல்ல புத்திசாலியாக வளர வேண்டும் என்று யாருமே நினைப்பதில்லை..!

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Scithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவன போட்டியில்

# சாதனை படைத்த ஈழத்தமிழ் மாணவன்

(டில்லி)

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்று வரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திர குமார் மேனகா தம்பதிகளின் புதல்வனான அர்ச்சிகன்,அமெரிக்காவில் உள்ள விண்வெளி குறித்த நிறுவனமான National Space Society (NSS) சர்வதேச ரீதியாக மாணவர்களிடையே நடத்திய போட்டியில் வெற்றி பெற்று ஈழத்தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக NATIONAL SPACE SOCIETY (NSS) அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26725 பேர் பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திர குமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை NSS அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள Texas மாநிலத்தில் NSS அமைப்பின் தலைமையில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப்பட்டிருப்பதுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.



இன்று சாதனை மாணவனாக பாராட்டுப் பெறும் அர்ச்சிகன் தாயகத்திலிருந்து தனது பெற்றோரோடு அனைத்தையும் இழந்து, வலிகளை மட்டுமே சுமந்து கொண்டு அகதியாக இந்தியாவிலே தஞ்சமடைந்திருந்தார். இம்மாணவனின் சாதனை எந்தச் சூழலிலும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது. (நி)

# இலங்கையில் மீண்டும் முதலீடு செய்யுமாறு ஜப்பானுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



(டோக்கியோ)

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு மீண்டும் வந்தும் முதலீடு செய்யுமாறு ஜப்பானுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். .

ஜப்பானின் முன்னாள் பிரதமர் யசுவோ ஃபுகுடா மற்றும் ஜப்பான்-இலங்கை சங்கம் இணைந்து டோக்கியோவில் நடத்திய சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டுள்ளார்.

டோக்கியோவில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகாவை சந்தித்துள்ளார்.

அத்துடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார். (நி)

## இலங்கைக்கு நேரடியாக கிடைக்கவுள்ள பல பில்லியன் டொலர் முதலீடுகள்

(கொழும்பு)

இலங்கைக்கு இந்த ஆண்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரவு 1.3 பில்லியன் டொலர் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டு, தீராத எரிபொருள், உணவுப் பற்றாக்குறை மற்றும் பணவீக்கம் ஆகியவற்றால் கடந்த ஆண்டு விளிம்பிற்கு தள்ளப்பட்டது.

எனினும், தனது வெளிநாட்டு நேரடி முதலீட்டை 38 வீதத்தால், 1.08 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளதாக முதலீட்டுச் சபையின் தரவு காட்டுகிறது.

இதில் ஒரு பகுதி இந்தியாவிலிருந்து கிடைத்தது.

இந்தியாவின் அதானி குழுமம் கடந்த ஆண்டு 442 மில்லியன் மதிப்பிலான இரண்டு காற்றாலை மின்நிலையங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதேவேளை முதல் காலாண்டில், இலங்கை ஏற்கனவே 600 மில்லியன் டொலர் பெறுமதியான முன்மொழிவுகளைப் பெற்றுள்ளதாக முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் ரேணுகா வீரக்கோன் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 260 | 200 | 280 | 330 |
| தக்காளி | 320 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 400 | 100 | 450 | 400 |
| கரட் | 260 | 360 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 180 | -- | 300 |
| வாழைக்காய் | 120 | 90 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 140 | 140 |
| பாகற்காய் | 450 | 550 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 140 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 350 | 350 |
| லீக்ஸ் | 360 | 380 | 400 | 400 |
| பீற்றூட் | 350 | 80 | 280 | 500 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 500 | 480 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 90 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 280 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 500 | 700 | -- | 600 |
| முள்ளங்கி | 80 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 140 | 150 | -- | -- |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 188





றன் ஓ'வென்று கத்தினான். வந்தியத்தேவன் அவனது வாயைப் பொத்தினான். காயத்தைச் சேந்தன் அமுதன் அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

அமுதனுடைய அன்னை பச்சிலைத் தழைகளைக் காயத்தில் வைத்துக் க்ட்டினாள். கந்தமாறன் மறுபடியும் முக்கி முனகினான். தூரத்தில் திடுதிடுவென்று மனிதர்கள் ஓடி வரும் சத்தம் கேட்டது.

"போ! போ! சீக்கிரம்!" என்றான் அமுதன். இரத்தக் கறை படிந்த கத்தியையும் வேலையும் கையில் எடுத்துக் கொண்டான் வந்தியத் தேவன். புறப்பட்டவன் தயங்கி நின்றான்.

"தம்பி! நீ என்னை நம்புகிறாயா?" என்று கேட்டான். "நான் கடவுளை நம்புகிறேன். உன்னிடம் பிரியம் வைத்திருக்கிறேன். எதற்காகக் கேட்டாய்?" "எனக்கு ஒர் உதவி செய்ய வேணும். இந்தப் பக்கத்தில் எனக்கு அவ்வளவாக வழி தெரியாது. அவசரமாகப் பழையாறைக்குப் போக வேண்டும். குந்தவைப் பிராட்டிக்கு முக்கியமான செய்தி ஒன்று கொண்டு போக வேண்டும். கொஞ்ச தூரம் வழிகாட்டுவதற்கு வருகிறாயா?"

உடனே சேந்தன் அமுதன் தன் அன்னையிடம் இன்னும் ஏதோ ஜாடையாக சொன்னான். இதிலெல்லாம் அவள் அதிக வியப்பு அடைந்ததாகத் தோன்றவில்லை. போய் வரும்படி சமிக்ஞையினால் தெரிவித்தாள். காயம் பட்டவனைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் ஜாடை காட்டினாள்.

சேந்தனும் தேவனும் புறப்பட்டுச் சென்றார்கள். முதலில் தேவனும் பின்னால் சேந்தனும் குதிரை மேல் ஏறிக் கொண்டார்கள்.

குதிரையின் சத்தம் கேளாதபடி மெதுவாகவே செலுத்தினான் வந்தியத்தேவன். சற்றுத் தூரம் போன பிறகு தட்டி விட்டான். குதிரை பாய்ச்சலில் பிய்த்துக் கொண்டு சென்றது.

குதிரை புறப்பட்ட அதே நேரத்தில் ஐந்தாறு வீரர்கள் குடிசைக்கு வந்து சேர்ந்தார்கள். கதவைத் தடதட வென்று தட்டினார்கள்.

அமுதனின் தாய் கதவைத் திறந்தாள். வாசற்படியில் நின்றாள். "இங்கே என்னமோ கூச்சல் கேட்டதே? அது என்ன?" என்று இரைந்தான் ஒரு வீரன். அமுதனின் அன்னை ஏதோ உளறிக் குளறினாள்.

"இந்தச் செவிட்டு ஊமையிடம் பேசி என்ன பயன்? உள்ளே போய்ப் பார்க்கலாம்!" என்றான் ஒருவன். "இவள் வழிமறித்துக் கொண்டு நிற்கிறாளே?" "அந்தப் பூக்குடலைப் பையன் எங்கே போனான்?"

"ஊமையைத் தள்ளிவிட்டு உள்ளே நுழையுங்களடா!" சேந்தன் அமுதனுடைய தாயார் மேலும் ஊமைப் பாஷையில் ஏதேதோ கத்தினாள்.

தன்னைத் தள்ள முயன்ற வீரனை அவள் தள்ளிவிட்டுக் கதவைத் தாளிட பார்த்தாள். நாலைந்து பேராகக் கதவைப் பிடித்துத் தள்ளிச் சாத்த முடியாதபடி செய்தார்கள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நேர்மை உயர்வு தரும்



மரியாதைராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப்பையை தேடிப் பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பைய்யை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லி விட்டார். ஊரு மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்க்லாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கௌரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர். அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை. வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

அப்படி காட்டு வழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டு கீழே கிடந்தது. அதை பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்த புறாவை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்று தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார், பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்து விட்டு வந்தார்.

அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதை கண்டார், அது ஒரு பை அதில் நிறைய பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தன் பணப்பையை விட்டுவிட்டு போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டு பிடித்து கொடுத்துவிட வேண்டும் என்று ஊருக்கு விரைந்தார்.

அப்போது ஊருக்குள் சென்ற போது அங்கு இருந்த கடையில் விசாரித்தபோது கடைக்காரர் சோமனைப் பற்றி சொல்லி அவர் தான் தொலைத்தவர், நீங்க இதை கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப் பார் என்றார்.

உடனே பூபாலனும் சோமன் வீட்டைத் தேடி பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார். சோமனுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார், அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. பணப்பை கிடைத்துவிட்டது, பணமும்சரியாக இருந்தது, இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை விதைத்தவன் வினை அறுப்பான்
திணை விதைத்தவன் திணை அறுப்பான்.
~ பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கங்கையில் நீராடினாலும் இந்த கர்மா தீருமோ!

அறத்தின் வழி நின்று பொருளீட்டுதல் பற்றிப் பலரும் அறியாமல் இருப்பது வேதனைக்குரியது.

ஆம், அறத்தினின்று விலகி ஈட்டப்படும் பொருள் அனைத்தும் அளவிறந்து ஆவது போலக் கெடும் என்பார் வள்ளுவர்.

எனவே செய்யும் தொழிலைத் தெய்வமாகத் போற்றி அதனை அறத்தினூடு செய்ய வேண்டும்.

எனினும் தர்மம் பற்றித் தெரியாதவர்கள் பாவகாரியங்களைச் செய்து தாமும் அழிந்து தம் சந்ததிக்கும் கேட்டை விளைவிக்கின்றனர்.

ஆம், அண்மையில் யாழ்ப்பாண சுற்றுவட்டத்தில் உள்ள உணவகங்களில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட ஆய்வுகளில் பழுதடைந்த இறைச்சி, பழுதடைந்த உணவு என்பன விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது மனிதப் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்கின்ற மிக மோசமான கொடுமை இடம்பெற்றுள்ளமை வெளிப்பட்டுள்ளது.

பொதுவில் இப்போது மக்களின் உணவுத் தேவையின் பெரும் பகுதியை உணவகங்களே ஈடு செய்கின்றன.

குறிப்பாக கட்டுமானம் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுகின்றவர்கள் மற்றும் கணவன், மனைவி என இருவரும் வேலைக்குச் செல்கின்ற குடும்பங்கள், தனிநபர்கள், முதியவர்கள் என பெரும்பாலானவர்கள் வீட்டுச் சமையலை விட்டு உணவுச்சாலைகளில் சாப்பாடுகளை எடுத்து தமது உணவுத் தேவையை நிறைவு செய்து கொள்கின்றனர்.

இவ்வாறு உணவகங்களில் சாப்பாட்டைப் பெற்றுக் கொள்கின்ற ஒவ்வொருவரிடமும் இருக்கக்கூடிய மிக உயர்ந்த நம்பிக்கை; தாம் கடைகளில் பெற்றுக் கொள்கின்ற உணவுகள் தரமானவை. கலப்படமற்றவை. பழுதற்றவை என்பதாகும்.

இதனை இன்னுமொரு படி மேற்சென்று கூறுவதாயின், உண்ணுகின்ற உணவில் எவரும் எந்தத் தீமையும் செய்ய மாட்டார்கள் என்பதே அந்த உயர்ந்த நம்பிக்கையாகும்.

ஆனால் அந்த நம்பிக்கை தவிடுபொடியாகும் வகையில் பழுதடைந்த இறைச்சி, பழுதடைந்த உணவு என்பன விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன என்ற செய்தி வெளியாகியபோது மனம் பதறிப்போனது.

என்னே கொடுமை! உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று போற்றுகின்ற நம் தமிழினத்தில் இப்படிச் செய்வது நீதியா? என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

ஆம், காலாவதியாகிப்போன குளிர்பானப் போத்தல்களில் திகதியை மாற்றியமைத்து, அவற்றை விற்பனைக்கு அனுப்புகின்ற பெருங்கேடு நடந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்தோ! காலாவதியாகிப்போன குளிர்பானங்களை குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் பருகினால் அதனால் ஏற்படுகின்ற விளைவு எத்துணை கொடுமையானது.

இக்கொடுஞ் செயல் மூலம் தேடுகின்ற கன்மவினை கங்கையில் நீராடினாலும் கரையுமோ! தீருமோ!

ஆகையால் அன்புக்குரியவர்களே! இக்கொடுஞ் செயல் இனி வேண்டவே வேண்டாம்.

# நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நடவடிக்கை

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

பொருளாதாரத்தின் அனைத்து பங்குதாரர்களின் நலனுக்காக நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இலங்கை மத்திய வங்கி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க வலியுறுத்துகின்றார்.

நேற்றையதினம் சர்வதேச தொழிலாளர் அமைப்பும் இலங்கை வர்த்தக சம்மேளனமும் இணைந்து இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு தொடர்பான தேசிய கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் முக்கிய நோக்கம், அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு பற்றாக்குறையை கட்டுப்படுத்த தீர்க்கமான நடவடிக்கை எடுப்பதாகும்.

அதிகரிக்கும் பணவீக்கம் மற்றும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஆகியவை நாம் எதிர்கொள்ளும் இரண்டு முக்கிய பிரச்சினைகள். பணவீக்கம் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதைத் தடுக்க நாங்கள் பல தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது.

70 சதவீதமாக உச்சத்தில் இருந்த பணவீக்கம் இப்போது 30% ஆக மாறியுள்ளது. மேலும் இந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் அல்லது அதற்கு முந்தைய காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்குத் திரும்பும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

நாங்கள் எடுத்த நடவடிக்கைகளால் வட்டிவீதங்கள் அதிகரித்தது வேதனையளிக்கின்றன.

குறிப்பாக வட்டி விகிதங்களை உயர்த்துவது, வணிகங்களுக்கு கடினமான மற்றும் வேதனையான நடவடிக்கை.

ஆனால் இப்போதைக்கு இதுதான் குறுகிய கால தீர்வு ஆனால் பணவீக்கம் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையின் கூர்மையான உயர்வுகளின் கடுமையான விளைவுகளைத் தடுக்க இத்தகைய நடவடிக்கைகள் அவசியம்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை புதுப்பிக்க வணிகங்கள் உட்பட பொருளாதாரத் தின் அனைத்து பங்குதாரர்களுக்கும் பங்களிப்பு செய்ய வேண்டியது அவசியம் என்றார். (ம-7,9)

## க.பொ. சாதாரணதர மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டையை தடுத்து வைக்க கூடாது

நாட்டில் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தர 2022(2023) பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிபர்களுக்கு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, எந்த காரணம் கொண்டும் அதிபர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான அனுமதி பத்திரங்களை பரீட்சார்த்திகளுக்கு வழங்காமல் தடுத்து வைக்கக் கூடாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாரேனும் ஒரு பரீட்சார்த்தி அனுமதிப் பத்திரம் இல்லாமல், பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனால் பாடசாலையின் அதிபரே அதற்கு பொறுக்கூற வேண்டும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## தையிட்டியில் விகாரைக்கு எதிரான போராட்டத்தில்

### காணொளி எடுத்து அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் தனியார் காணியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில், குறித்த விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று ஜனநாயக ரீதியில் இடம்பெற்றது. இந்த போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களையும், செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களையும் அங்கிருந்த, கான்ஸ்டபிள் தரமுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது கையடக்க தொலைபேசியில் காணொளி மற்றும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் இடம்பெறும்போது அருகே இருந்த பலாலி பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி அவரை கண்டிக்காமல், தடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார். இதனை அவதானித்த போராட்டக்காரர்கள் பொலிஸ் அராஜகம் ஒழிக, கால் முறிப்பதுவும் தொலைபேசி களவெடுப் பதுவும் பொலிஸாரின் கடமையா, கொலை குற்றச்சாட்டு மற்றும் 9 குற்றச்சாட்டுக்கள் உள்ளவருக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிபதவியா என கோஷமிட்டனர். (ம-7,9,104)

## பாடசாலையில் கடமையாற்றுவது அச்சுறுத்தலாக உள்ளது

### இடமாற்றம் கோரி ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் கோரி வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பயிற்சி ஆசிரியரொருவர் மீது பாடசாலை மாணவன் ஒருவர் தாக்குதல் நடத்தியிருந்தார்.

இந்நிலையில் குறித்த கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் வடக்கு ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அக்கடிதத்தில் குறித்த கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகிய நாம் தினம் தினம் இப்பாடசாலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

24.05.2023 அன்று யாழ்ப்பாண தேசியக் கல்வியற் கல்லூரியால் பயிற்சிக்காக வந்த ஆசிரியர் மீது தரம் 11 மாணவர்கள் தாக்குதலை ஏற்படுத்தி உள்ளனர் . இது இரண்டாவது சம்பவமாகும். இவ்வாறு தொடர்ந்து ஆசிரியர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுவதனால் இப்பாடசாலையில் கடமையாற்றுவது அச்சுறுத்தலாகவே உள்ளது. எனவே எமக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இடமாற்றம் பெற்றுத் தராவிடின், உடல் ரீதியாக பாதிக்கப்படும் பட்சத்தில் நீங்களே பொறுப்புக் கூறுபவர்களாக கருதப்படுவீர்கள் என்றுள்ளது. (ம-7,9,33)

## யாழில் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் மோதல் விவகாரம்

### பொலிஸ் நடவடிக்கைக்கு உட்படுத்தி விசாரிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயிற்சி ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இடையே இடம்பெற்ற மோதல் அசம்பாவிதம் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்திற்கும் - யாழ்ப்பாணம் வலயக் கல்வி பண்ிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இடையேயான இருதரப்பு மோதல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக ஆசிரியர் மற்றும் பாடசாலை இரு தரப்பினரையும் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்யுமாறும், வலயக்கல்வி அலுவலகத்தினால் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்திற்கு இது குறித்து எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்றும், மேற்படி பொலிஸார் மற்றும் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களம் இணைந்து உரிய சட்ட விசாரணைகளை முன்னெடுத்து முறையான தீர்மானம் ஒன்றை நீதிமன்றின் ஊடாக முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் மோதலுடன் தொடர்புடைய பயிற்சி ஆசிரியர் அவர் தரப்பிலும், பாடசாலை சார்பில் அதிபர் தரப்பிலும் பொலிஸில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது. (ம-7,9,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






**மின்பிறப்பாக்கி**

ஒளியை வழங்குதல், உபகரண்ணங்களின் தொழிற்பாடு ஆகியவற்றிக்கு அவசியமான மின்சக்தியைப் பிறப்பாக்கும்.

**படகோட்டல் ராடார்**

ராடார் என்பது ஒரு மின்காந்த உணரி ஆகும். ராடார் ஆனது ரேடியோ அலைகளைப் பயன்படுத்தி சுற்றியுள்ள பொருட்களைக் கண்டறியும் ஒரு கருவியாகும். எனவே, கடலில் கப்பல்கள், மிதவைகள் அல்லது வேறு பொருட்களை ராடார்களால் கண்டறிய முடியும்.






உயர் மீடிறன் வானொலி




**வானொலி சமிக்ஞை உபகரணம்**

மீனவர்களிடையே இரண்டு வகையான வானொலிச் சமிக்ஞை உபகணரங்கள் உள்ளன.ஒன்று SSB வானொலி மற்றையது உயர் மீடிறன் வானொலி ஆகும்.

**SSB வானொலி**

SSB வானொலி என்பது ஆங்கிலத்தில் Single Side Band Radio ஆகும். இது அதிக வீச்சில் பயன்படுத்தக் கூடிய வானொலித் தொடர்பாடல் உபகரணமாகும். தரையிலிருந்து நூற்றுக்கணக்கான கடல் மைல் தொலைவில் கடலில் நிற்கும் மீனவருடன் தரையிலிருந்து தொடர்பு கொள்ள முடியும். ஆபத்தான நிலைமைகள், மீன்கள் உள்ள இடங்களைப் பிறருக்கு தெரிவித்தல் ஆகியவற்றுக்கு இது உதவும். மீன்பிடித் துறையினருக்கு என ஒதுக்கப்பட்ட அலை வரிசைகள் மூலம் செய்திப் பரிமாற்றல் மேற்கொள்ளப்படும்.

SSB என்பது அடிப்படையில் FM அல்லது AM போன்ற ஒரு"முறை" ஆகும். SSB என்பது ஒரு ரேடியோ அலையில உங்கள் குரல் அல்லது பிற தகவல்களை மிகைப்படுத்தி, பின்னர் அந்த ரேடியோ அலையை அனுப்பும் மிகவும் திறமையான முறையாகும்.

**உயர்மீடிறன் வானொலி**

உலகிலுள்ள ... குகள்) அனைத்தும் பயன்படுத்தும் முறையாகும். சிறியவீச்சினுள் பயன்படுத்தக் கூடிய வானொலித் தொடர்பாடல் உபகரணமாகும்.

**மீன்பிடியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் பணிகளும்**

• நீரியல் வளத் திணைக்களம் சட்டங்களினை நடைமுறைப்படுத்தல், நிலைபேறான முகாமையைப் பேணுதல், பாதகமான மீன்பிடி முறையைத் தடைசெய்தல் போன்றவை அதன் பணிகளாகும்.இது 1944 இல் நிறுவப்பட்டது.

• நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் இதன் தொழிற்பாடாக ஆராய்ச்சி அபிவிருத்திக்கு உதவுதல், கடல் வரைபடம், மீன்களின் வசிப்பிடம் தொடர்பான படங்கள் தயாரித்தல், சூழல் மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல் போன்றவற்றைக் குறி ப்பிடலாம். இது 1981 இல் நிறுவப்பட்டது.

• தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1999 இல் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைச்சட்டத்தின் (எண். 53 இன் 1998) மூலம் நிறுவப்பட்டது.

இது நீருயிரின வள நடவடிக்கைகளை விருத்தி செய்தல், நீருயிரின வளர்ப்புக்கான கல்வி பயிற்சி வழங்குதல், அறுவடை தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துகிறது.

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1964 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கூட்டுத்தாபனத்தின் நோக்கம் முழு மீன்பிடித் துறையையும் உள்ளடக்கியிருந்தது. இதன் தொழிற்பாடாக மீன்களைக் கொள்வனவு, விற்பனை செய்தல், களஞ்சிய வசதி ஏற்படுத்தல், நடமாடும் விற்பனை சேவை நடத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம்**

1972 இல் நிறுவப்பட்டது. இதன் பணிகளாக நங்கூரம் இடும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், துறைமுக அடிப்படை வசதிகளைக் ஏற்படுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

• மட்டுப்படுத்தப்பட்ட சீநோர் நிறுவனம் மீன்பிடிக் கலங்கள் மற்றும் மீன்பிடிச் சாதனங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்கின்றது. சீநோர் அபிவிருத்தி நிறுவனமானது நோர்வே நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டு 1967 இல் இயங்கத் தொடங்கியது.

நோர்வேயினால் அறுபதாம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சீநோர் நிறுவனம் காரைநகரிலும் குருநகரிலும் வலையுற்பத்தி மற்றும் கண்ணாடிநார் இழைப்படகு உற்பத்திகளை மேற்கொண்டது.

இதனால் மலிவு விலையில் மீனவர்கள் மேற்கூறிய உபகரணங்களைப் பெற முடிந்தது. இந்நிறுவ ணம் பிற்காலத்தில் அரசமயப்படுத்தப்பட்டு, அதன் தொழில்நுட்பம் தெற்கில் படகுகள் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

• தேசிய மீன்பிடி மற்றும் எந்திரவியல் நிறுவனம் சமுத்திரவியல் சார்பான கற்கை நெறிகளையும் பயிற்சிச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கொழும்பு...

மாக தற்போது வடக்கு ரயில் சேவைகள் கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை மட்டுமே இடம்பெறுகின்றன.

இந்நிலையில், அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான ரயில் பாதையின் திருத்தப் பணிகளை அடுத்த மாதம் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மீண்டும் ரயில் சேவையை ஜூலை 15ஆம் திகதிக்குள் ஆரம்பிக்க முடியும் என மஹவ - ஓமந்தை ரயில்வே திட்ட பணிப்பாளர் அசோக முனசிங்க தெரிவித்தார்.(ம-7,9)

## பாடசாலை...

குறிப்பிட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## வவுனியாவில்...

தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலத்திற்கு நேற்று சென்ற இருவர் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தியதுடன், பாடசாலையின் காவலாளியை அழைத்து மாணவர்களை இலக்கு வைத்து இந்த பகுதிக்குள் இரண்டு குண்டுதாரிகள் நடமாடித் திரிவதாகவும், இதனால் மாணவர்க்ளை கூட்டமாக வெளியில் நடமாடித்திரிய வேண்டாம் எனவும் கூறிச் சென்றுள்ளனர்.

குறித்த தகவலை கடமையில் இருந்த காவலாளி பாடசாலையின் அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் கேட்டபோது, பொலிஸார் என அடையாளப்படுத்திய இருவர் மேற்குறித்த தகவலை காவலாளியிடம் கூறிச் சென்றதை உறுதிப்படுத்தியிருந்தார்.

இதனால் அங்கு பரபரப்பான நிலை ஏற்பட்டது. அத்துடன், பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் வவுனியா பாடசாலைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அச்சமடையத் தேவையில்லை எனவும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-7,9,250)

## வவுனியாவில் 6...

கம் செய்த நெடுங்கேணி இராணுவ முகாமின் இராணுவக் கோப்ரலுக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14.05.2013 அன்று பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சிறுமியை ஆட்கடத்தல் புரிந்த குற்றச்சாட்டும், சிறுமியை கடத்தி துஷ்பிரயோகம் செய்த இரண்டாவது குற்றச்சாட்டும் என சட்டமா அதிபரினால் இரு குற்றச்சாட்டுகள் நிரம்பிய குற்றப்பத்திரிகை வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

மாணவி வெள்ளை சீருடையில் இரத்தம் படிந்த நிலையில் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டமை, விசேட சிஐடி பொலிஸ் அணி இராணுவ சிப்பாயை கைது செய்தமை, கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாயை அடையாள அணி வகுப்பில் அடையாளம் காட்டியமை, நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாம் கட்டளை அதிகாரி நீதிமன்றிற்கு சாட்சியமளித்தமை, காட்டுக்குள் இருந்து சிறுமியின் சப்பாத்துக்கள் மீட்கப்பட்டமை, இறுதியாக சட்ட வைத்திய அதிகாரியின் சட்ட வைத்திய அறிக்கை என்பவற்றை வைத்து கைது செய்யப்பட்ட நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாமின் இராணுவக் கோப்ரலை குற்றவாளி என நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன் அவருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட மாணவிக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கவும், அதனை கட்டத்தவறின் இரண்டு ஆண்டு கடூழிய சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படவும் மற்றும் தண்டப்பணம் பத்தாயிரம் ரூபாய் கட்டத்தவறின் இரு மாதம் கடூழிய சிறைத்தண்டனை எனவும் நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ம-7,9)

## குடிநீர்...

தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உடனான சந்திப்பின்போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வடக்கு மாகாணத்தில் குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு குடிநீர் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயங்களுக்கு விரைவில் தீர்வளிக்க வடக்கு பகுதிக்கு நேரில் வருவதாகவும், மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ம-7,9)

## தையிட்டி...

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தையிட்டியில் தனியார் காணியில் . திஸ்ஸ விகாரை அமைத்ததற்கு எதிராக கடந்த 22ஆம் திகதியில் இருந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த இரு நாட்களுக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்ட கஜேந்திரன் எம்.பி உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை விகாரை திறந்து வைக்கப்பட்ட நிலையில் மக்கள் போராட்டம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இனப்படுகொலை இராணுவத்திற்கு விகாரை ஒரு கேடா, இராணுவமே வெளியேறு, கொலை குற்றவாளிக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியா?, காலை உடைப்பதுவும் தொலைபேசி களவெடுப்பதுவும் பொலிஸாரின் கடமையா, தையிட்டி எங்கள் சொத்து, இந்த மண் எங்களின் சொந்த மண், இனப்படு கொலை இராணுவமே வெளியேறு என கோஷமிட்டவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராடினர்.

இந்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், த.தே.ம. முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,9,104)

## வடக்குக்...

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "போரில் தமிழர்கள் அழிக்கப்பட்டதை விட தற்போது மோசமாக அழிக்கப்பட்டு வருகின்றனர்.

வடக்குக் கிழக்கில் கிட்டத்தட்ட 200 இற்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

அந்த ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றது" என தெரிவித்துள்ளார். (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1580
வெற்றி இலக்கங்கள்
கன்னி 7 7 6 2 3 0

தன நிதானய
திகதி - 2023.05.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1155
J 44 46 58 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 3367
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 29 30 36 55
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1473
O 07 05 52 67 68

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 434
மேஷம் 03 32 37 43 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/25
சீட்டிழுப்பு இலக்கம் 5125
C 8 9 8 0 9 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2099
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.05.25
தினம் வியாழக்கிழமை
Z 15 16 34 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,821,600/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.25
வெற்றி வாரம்: 4260
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,642,116.90
வெற்றி இலக்கங்கள்
09 12 14 39 D
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,139,803.40
திகதி 2023-05-25
வெற்றி வாரம் 3811
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
01 15 37 59
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,775,680/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 04 11 35 57 61
சுப்பர் இலக்கம்
1275
2023.05.25
வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 332,649,741.40
DLB

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 596
திகதி 2023-05-25
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 20 37 46
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 20,088,460.00
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

அத கோடீபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1925
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ 50,000,000/-
சீட்டிழுப்பு திகதி : 2023 05 25
வெற்றி இலக்கங்கள்
07 31 42 45 V
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ONLINE APPLICATIONS
- ✓VISA APPOINTMENTS
- ✓PASSPORT APPLICATION
- ✓POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777 (C-6619)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-6619)





## புனித அன்னை வேளாங்கன்னி ஆலயத் திருவிழா
### (கரம்பன் - ஊர்காவற்றுறை)

25.05.2023 - கொடியேற்றம் (பிற்பகல் 4.30pm)
30.05.2023 - நற்கருணைத் திருவிழா (பிற்பகல் 4.30pm)
31.05.2023 - திருவிழா திருப்பலி காலை 6.30am ஆரம்பமாகும்.

பங்குத் தந்தை

அனுசரணை - All Ceylon Distributors (15733)


# யாழ். நகர் பகுதியில் வாள்வெட்டு தாக்குதல் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் படுகாயமடைந்து இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழக்கடை நடத்துவோர் மீது நேற்று இரவு இனந்தெரியாத குழு ஒன்றினால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்தோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7.9.33)


## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503 (15537)

## ஆலய பூசகர் தேவை

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் ஆலயத்திற்கு சொந்தமான இல்லத்தில் தங்கி இருந்து பூசை (3 வேளை) கடமைகளை நிறைவேற்ற அந்தணர் குலத்தைச் சேர்ந்த குருக்கள் தேவைப்படுகின்றார்.
ஊதியம் பேசித் தீர்மானிக்கலாம். (15735)

076 105 6343

## கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

### கல்யாண மாலை பதவி வெற்றிடம்

முகாமைத்துவ உதவியாளர் பெண்கள்
(தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள்)

குறிப்பு : யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு: 076 097 3127



## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், கிளினர், திரவியங்கள், கான்ட்வோஸ், கொம்போட், வாசனை திரவியங்கள், மாபிள் கிளினர், றூம் ஸ்பிறே, தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பேர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (15738)

### சரவணபவன் பான்சி ஹவுஸ்
26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்
தே.கலைத்தாசன் (கரன்) 021 315 5900

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15738)

077 638 5683
076 755 8606

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி (15738)

076 739 0413
076 436 5814
077 065 4525





## Pearl Island Inn
### Hotel, Restaurant & Bar

Dine - in | Take Away
Soft Drinks | Soft Liquor

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன் உயர்தரம் வாய்ந்த தங்குமிட வசதிகளுடன் (Rooms) மற்றும் உலக தரம் வாய்ந்த யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் உணவு வகைகள் மற்றும் குளிர்பானங்களை இங்கிருந்தும் உங்கள் வீடுகளிற்கும் எடுத்து சென்று சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்.

மதுப்பிரியர்களை மகிழ்விக்கும் விதமாக Bar உம் திறக்கப்பட்டுள்ளது. (C-6611)

உங்கள்
S.Ubesegaran ( Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.